195

195

சிவமயம்

திருவெம்பாவை
திருப்பள்ளியெழுச்சி

MADRAS

மூலமும்

திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார்
பி. ஏ., பி. எல்., அவர்கள் எழுதிய

உரையும்

24AS
854

திருக்கோவலூராதீனம்
திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்து
ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான
சிவாசாரிய சுவாமிகளால்
பார்வையிடப் பெற்றவை.

மூன்றாம் பதிப்பு

சைவ சித்தாந்த மகா சமாஜம்
22-A, கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

உரிமை பதிவு
செய்யப்பட்டது.

1938

விலை பை
மூன்று.



7 JAN 1939
MADRAS
195

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன்வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டுஇங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே! என்னே!
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். க

(உரை) ஒளிமிக்க அகன்ற கண்களை யுடையவளே! முதலும் முடிவும் இல்லாத அரிய பெரிய சோதியாய் உள்ளவனை நாம் பாடக் கேட்டும் இன்னும் தூங்குகின்றாயே! உன் காதும் செவிடா? மகாதேவனுடைய வீரக்கழல் அணிந்த திருவடிகளை நாம் வாழ்த்தும் ஒலி தெருவில் கேட்டவுடனே ஒருத்தி விம்மியழுது மெய்

மறந்து மலர் தூவிய படுக்கையிற் புரண்டு புரண்டு மூர்ச்சையாயினுள். தோழியாகிய நீயோ இப்படி தூங்குவது? யாம் சொல்வதை ஏற்று ஆராய்வாயாக எம் பாவையே. (இந்தக் கடைசி வாக்கியத்தை ஒவ்வொரு பாட்டு உரையின் கடைசியிலும் சேர்த்துக்கொள்க.) 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப் பகல்நாம்
 பேசும்போது எப்போது இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்? நேரிழையீர்!
 சீசீ! இவையும் சிலவோ? விளையாடி
ஏசும்இடம் ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
 கூசுமலர்ப் பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
 ஈசனுர்க் கன்பார்? யாம்ஆர்? ஏலோர் எம்பாவாய். உ

(உரை) ஆபாரணம் பூண்ட அழகியே! பசுமை நிறமுள்ள சத்தியுடன் கூடிய பரஞ்சோதியனை எலும்பு நெக்குருக அல்லும் பகலும் பாடுங்காலம் எக்காலம்? இம்மலாணையே நீ விரும்புவதோ? (என்று தோழியர் சொல்லத் தூக்கம்விட்டு எழுந்திருப்பவள்) நகைகளையுடைய நங்கைமாரே! சீ! சீ! உங்கள் வசைச் சொற்களில் இவை கொஞ்சம்தானே? விளையாடி ஏசுவதற்கு

இதுவோ சமயம் ? (எனப் பிறர் பதில் சொல்வதாவது) எம்பாவையே ! வானோர் வழுத்தினாலும் காணமுடியாத திருவடிகளை நமக்குத் தர, குருவாய் வந்தருளும் தேஜோ மயனும் சிவலோகனும் தில்லைத் திருக்கூத்தனுமாகிய சிவபெருமானுக்கு நமது அன்பு எந்த தன்மையுடையது ? நாம் யார் ? அடிமைகள் அல்லோமோ? 2

முத்தன்ன வெள்நகையாய்! முன்வந்தெதிர் எழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன்கடை திறவாய் !
பத்துடையீர்!ஈசன்பழஅடியீர்!பாங்குடையீர்! [தோ?
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டால் பொல்லா
எத்தோ?நின் அன்புடைமை எல்லோம்அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ ? நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். ௩

(உரை) முத்துமாலைபோன்ற வெண்பல் வரிசையுடையவளே ! (நேற்றுவரையில் இதற்கு) முன்பு எங்களுக்கெதிரே எழுந்துவந்து "அத்தனே, அமுதனே, ஆனந்தனே" என்று வாயூறி இனிக்கப் பாடுவையே. (இன்று நாம் அழைத்தும்) எழுந்துவந்து கதவைத் திறக்கவில்லையே ! (என்று தோழிமார் சொல்ல நித்திரைவிட்டு எழுகின்றவள்) நீங்கள் ஈசனுடைய பழைய

அடியார்கள், அவனிடத்திலேயே பற்றுடையவர்கள், (அன்பென்னும் ஊற்றுப்) பாங்குடையவர்கள். நானோ புதிய அடியவள். எனது சிறுமையைத் தீர்த்து என்னை ஆட்கொண்டால் தீமை விளையுமோ? (என்று ஏசத் தோழியர் பதில் கூறுவதாவது) எத்தாகப்பேசுகிறாயோ? உனது அன்புடைமை எங்கட்குத் தெரியாதோ? தூய சித்தம் உடையவர் நமது சிவனைப் பாடமாட்டாரோ? எமக்கு வேண்டியது இத்தனையே (பாடுவதே) 3

ஒள்நித்தில நகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வண்ணக்கிளி மொழியார் எல்லாரும் வந்தாரோ?
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே!
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். ச

(உரை) பளபளப்பான முத்தைப் போன்ற பற்களை யுடையவளே! உனக்கு இன்னம் பொழுது விடியவில்லையா? (என்று தோழியர்கூற) கிளிபோல இனிமையாய்ப் பேசும் அழகிகள் எல்லாரும் வந்துவிட்டார்களா? (என்று நித்திரைவிட்டு எழுபவள் கேட்கத் தோழியர்

பதில் கூறுவதாவது) வந்தவர்களை உள்ளபடிக்கணக்கிட்டுக் கூறுகிறோம். அது வரையில் தூங்கி வீண்பொழுது போக்காதே. வானோர்க்கு ஒப்பற்ற மருந்தை, வேதத்தின் சிறந்த பொருளைக் காண்பதற்கு இனியவனைப் பாடிக்கசிந்து உள்ளம் உள்ளே நெக்குவிட்டு நின்று உருக யாம் இறைவன் வழியில் பொருந்தினோம். இதை நினைந்து நீயும் குறைவற்ற அறிவுத்துயில் (என்ற நிட்டையை) ஏற்பாயாக. 4

மால்அறியா நான்முகனும் காணாமலையினை நாம்
போல் அறிவோம் என்றுள்ளப் பொக்கங்களே பேசும்
பால் ஊறுதேன்வாய்ப் படிறீ ! கடைதிறவாய் !
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே ! சிவனே ! என்று
ஓலமிடினும் உணராய் உணராய் காண் !
ஏலக்குழலி பரிசேலோர் எம்பாவாய். ரு

(உரை) திருமாலும் பிரமனும் காணாத (அனற்பிழம்பும்) அண்ணாமலை (யுமாகிய) இறைவனை வெற்றுயிர்களாகிய நாமோ அறிவோம் என்று வேடிக்கையாகப் பொய் பேசும் கபடியே ! கதவைத்திற ! நிலவுலகினர், வானுலகினர், பிறவலகினராகிய எவரும் அறிவதற்கரிய

அருவத்தையும், நம்மையாட் கொண்டருளி மலத்தை நீக்கும் (குருலிங்க சங்கம) உருவத்தையும் பாடிச் சிவனே ! சிவனே ! என்றுஓலமிட்டு அலறினும்அதைக் கேளாமல் இன்னம் தூங்குகிறாயே ! ஏலம் மணக்கின்ற கொண்டையை உடையவளே ! 5

மானே ! நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போனதிசை பகராய் ? இன்னம் புலர்ந்தின்றோ ?
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலை அளித்தாட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன்வாய் திறவாய் !
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப்பாடேலோர் எம்பாவாய். ௬

(உரை) (விழியாலும் அழகாலும்) மான்போன்றவளே! உங்களை நானே வந்து நாளைக்கு எழுப்புவேன் என்று நேற்று நீ கூறிய சொல்லும் நாணமில்லாமல் எந்தத் திசையில் ஓடிற்று ? இன்னம் விடியவில்லையா ? வானவரும் மண்ணுளோரும் பிறரும் அறிவதற்கரிய பெருமான் தலையன்போடு தானே வந்து எம்மை ஆட்கொண்டருளும் வானளாவிய திருவடியைப் பாடிவந்த எங்கட்குக்

கதவைத்திற! பாட்டுக்கு உருகாத தன்மை உனக்கே தகும். எமக்கும் பிறர்க்கும் நாதனுவானைப் பாடுக. 6

அன்னே! இவையும் சிலவோ? பல அமரர்
உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய்திறப்பாய்!
தென்னு என்னுமுன்னம் தீசேர்மெழு கொப்பாய்
என்னானை என் அரையன் இன்அமுதென் றெல்லோமும்
சொன்னேம்கேள்வெவ்வேருய்இன்னம்துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளாகிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். எ

(உரை) தாயே! (உனது திருவிளையாடல்களில்) இவையும் சிலவா? தேவர்களாலும் நினைத்தற்கும் அரியவனும் ஒப்பற்றவனுமாகிய பெரும் புகழுடையவனது (சங்கு முதலிய) திருச்சின்னங்கள் முழங்கக் கேட்டு "சிவ, சிவ" என்று கதவைத் திற. (தென்னுடைய சிவனே) என்று சொல்வதற்குள் நெருப்பின் அருகில் வைக்கும் மெழுகைப் போல உருகுவாய், (ஆனல் இப்போது என்தலைவன், அரசன், இனியஅமிர்தன், என்று எல்லாரும் தனித்தனியே சொன்னலும் இன்னும் தூங்குகிருயே? கல்நெஞ்சுடைய மூடரைப்போல சும்மா உறங்குகிருய். தூக்கத்தின் பெருமை தான் என்னே! 7

கோழிசிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கு எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணைக்
கேழில் விழுப்பொருள்கள் பாடினேம் கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ? வாய்திறவாய்!
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்! அ

(உரை) கோழி கூவுகின்றது. மற்றப் பறவைகளும் பாடுகின்றன. ஏழில் முரசம் முழங்குகின்றது. சங்குகள் எங்கும் முழங்குகின்றன. தனது உரிமை வண்ணத்தைக் காட்டாத பரஞ்சோதியும் ஒப்பற்ற பேரருளாளனுமாகிய இறைவனது இணையற்ற புகழைப் பாடினேமே நீ கேட்கவில்லையா? நீ வாழ்ந்தே கிட! இது என்ன உறக்கமோ? கதவைத் திற. ஆஞ்ஞா சக்கரமுடையானும் அறவாழி அந்தணனுமாகிய கடவுளிடத்து உன்னுடைய அன்பு இவ்வளவுதானா? காலங் கடந்த முதல்வனும் உமையொருபாகனுமாகிய ஒருவனைப் பாடுக. 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே !
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீர்அடியோம் [வோம்
உன்அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கேபாங்கா
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய் ! ௯

(உரை) முன்னைப் பழமைக்கும் பழையவனே ! பின்னைப் புதுமைக்கும் புதியவனே ! உன்னையே தலைவனாகப் பெற்ற சீருடைய அடியோங்கள் உன் அடியவர் திருவடி வணங்குவோம், அவ்வடியவர்கட்கே அன்புசெய்வோம், அவர்களே எங்கள் கணவரு மாவதற்குரியவர்கள். அவர்கள் விரும்பிக் கட்டளை யிடுவதைப் பணிவோடு பரிந்து செய்வோம். இவ்வாறே என்றென்றும் இருக்கும்படி அருள்புரிவாயானால் எம்பெருமானே எங்களுக்கு ஒரு குறையுமில்லை. 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப்பொருள் முடிவே !
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்

ஓத உலவா ஒருதோழன் தொண்டர் உளன்
கோதில் குலத்தரன் தன் கோயில்பிணாப்பிள்ளைகாள்!
ஏதவன் ஊர் ? ஏதவன்பேர் ? ஆர்உற்றார்? ஆர்அயலார்?
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய் ! க0

(உரை) பாதாள உலகம் ஏழினுக்கும் கீழ் இங்குதான் என்று சொல்லமுடியாதபடி உள்ளது அவனுடைய திருவடித்தாமரை. பூவணிந்த அவன் திருமுடி எல்லாப் பொருளுக்கும் முடிவாயுள்ளது. ஒரு பாதியில் அம்மை விளங்குகிறாள். திருமேனி ஒன்றே உடையனல்லன். வேதங்களும் வானோரும் மண்ணுளோரும் எவ்வளவு புகழ்ந்தாலும் முடிவடையாத புகழையுடைய ஒப்பற்ற தோழன். தொண்டர் உள்ளத்தில் இருப்பவன். இத் தகைய அரனுடைய திருக்கோயிலில் வழிபடும் குற்ற மற்ற உயர்ந்த குலப் பெண்மணிகளே! அந்த அர னுடைய ஊர்யாது, பேர்யாது, உறவினர் யாவர், அரு கில் இருப்போர் யாவர்? அவன் புகழ்பாடும் வகை யாது?

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர் என்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா! வழி அடியோம் வாழ்ந்தோம்காண்! ஆர்அழல்போற்
செய்யா! வெண்ணீருடி! செல்வா! சிறுமருங்குல்

மையார் தடங்கண் மடந்தை மணவாளா !
ஐயா ! நீஆட் கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம்உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். ௧௧

(உரை) ஆரவாரம் செய்து எரியும் அனல் போன்ற சிவப்பு நிறமுடையவனே ! வெண்ணீறு பூசியவனே ! செல்வனே ! சிறிய இடுப்பும் மைபூசிய விசாலமான கண்களுமுடைய உமையம்மையின் மணவாளனே ! எங்கள் தலைவனே ! வண்டுகள் மொய்க்கும் (பூக்களையுடைய) பெரிய குளத்தில் மூழ்கி, "முகேர்" என்ற சப்தம் எழும்படியாகத் தண்ணீரைக் கையாலடித்துக் குடைந்து, உனது திருவடியைப் பாடி, உனது வழி நின்ற அடியோங்கள் வாழ்ந்தோம். ஐயனே ! நீ (உயிர்களை) ஆட்கொண்டருளும் திருவிளையாட்டு முறைமைப்படி உய்வார்கள் உய்யும் வகைகளிலெல்லாம் படிப்படியாகச் சரியை கிரியை யோகம் ஞானம் என்ற வழிகளில் நின்று, உய்தி கூடி முடித்தோம். இனி நாங்கள் வழுவாதிருக்க எங்களைக் காப்பாயாக. 11

ஆர்த்த பிறவித்துயர் கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் ! நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் ! இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்[ம்
பூத்திகழும்பொய்கைக் குடைந்துஉடையான்பொற்பாத
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய். கஉ

(உரை) நம்மைக் கட்டுப்படுத்தும் பிறவித் துன்பம் ஒழியும்படி நாம் மகிழ்ந்து ஆடுதலாகிய வணக்கத்தை ஏற்கும் பரிசுத்தமானவனும், நல்ல தில்லைச் சிற்றம்பலத்தில் சோதிமயமாக நின்று ஆடுவோனும், வானுலகத்தையும் மண்ணுலகத்தையும் மக்களையும் உண்டாக்கிக் காத்து அழித்து விளையாடுவோனும்(ஆகிய சிவபெருமானுடைய) புகழ்வார்த்தைகளைப் பேசி, நமது வளையல்கள் குலுங்கவும், மேகலைகளாகிய ஆபரணங்கள் முழங்கவும், நமது அழகிய கொண்டைகளிலுள்ள (பூக்களை மொய்க்கும்) வண்டுகள் ரீங்காரம் செய்யவும் (தாமரைப்) பூக்கள் நிறைந்த குளத்துத் தண்ணீரைக் குடைந்து நம்மை யுடையவனது பொற்பாதங்களைப் புகழ்ந்து பெரிய சுனையிலே நீராடுவோம். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கண் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த

பொங்குமடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். ௧௩

(உரை) கருங்குவளைப் பூக்களும், செந்தாமரைப் பூக்களும், அழகிய பக்ஷிகளும், அவற்றின் பாட்டொலியும், தங்கள் அழுக்கைப் போக்க வருவோரும் இருப்பதினால் எங்கள் பெருமாட்டியையும் பெருமானையும்போலுள்ள (ஊற்றுநீர்) பொங்கும் இந்த மடுவில் இறங்கி நமது சங்குவளையல்களும், காலிலுள்ள சிலம்புகளும் கல்லென்று ஒலிக்கவும். நமது கொங்கைகள் (பூரித்துப்) பொங்கவும், நாம் குடைந்து விளையாடும் மடுநீர் பொங்கவும் இத்தாமரைத் தடாகத்தில் ஆடுவோமாக.

குறிப்பு:—கருங்குவளை போன்ற கண்ணையும், செந்தாமரை போன்ற முகத்தையும் அழகிய குருகுகளையும் (=வளையல்களையும்) ரீங்காரம் செய்யும் வண்டுகள் நிறைந்த பூமாலையையும் உடையபடியால் எம்பிராட்டி இம்மடுவைப்போலுள்ளாள். கருங்குவளை போன்ற கண்டத்தையும் செங்கமலம் போன்ற திருவடியையும் கொக்கிறகுகளையும் (குருகினம்) பின்னிக்கொண்டிருக்கும் பாம்புகளையும் (அரவம்) உடையபடியால் எம்பெரு

மான் இம்மடுவைப் போலுள்ளான். கருங்குவளை போன்ற கண்ணால் பார்த்து சக்ஷு தீக்ஷை செய்தும், செங்கமலம் போன்ற திருக்காதத்தையும் திருவடியையும் சிரசின்மேல் வைத்து ஸ்பரிச தீக்ஷை செய்தும் குருகினம் பாடுவது போன்ற இனிய குரலில் உபதேசித்து வாக் தீக்ஷை செய்தும், "திருநோக்கால் பரிசத்தால் திகழும் வாக்கால்" தம்மைச் சார்வாருடைய மலங்களைப் போக்குவதால் அருட்சத்தியோடு கூடிய இறைவன் இம்மடுவுக்கு உவமையாயினான். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
  கோதைகுழலாட வண்டின் குழாம்ஆடச்
சீதப்புனல் ஆடிச் சிற்றம்பலம்பாடி
  வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
  ஆதிதிறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
  பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். கச

(உரை) காதிலுள்ள குண்டலங்களும், (மார்பிலுள்ள) பொன் நகைகளும், பூமாலை சூடிய கொண்டையும் அதை மொய்க்கும் வண்டின் கூட்டமும் ஆடும்படியாக இக்குளிர்ந்த நீரில் ஆடி, திருச்சிற்றம்பலத்தை

யும், வேதப் பொருளையும், இறைவன் அப்பொருளாகும் வகையையும், சோதியின் திறத்தையும், (இறைவனது) கொன்றை மாலையையும், (இறைவன்) ஆதியாகும் திறத்தையும், அந்தமாகும் வகையையும், மலத்தைப் போக்கி நம்மை வளர்த்தெடுத்த இறைவியின் திருவடிச் சிறப்பையும் பாடி ஆடுவோமாக. 14

ஓரொருகால்எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர்ஒருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப் [யாள்
பார்ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணி
பேர்அரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தா
வார்உருவப் பூண்முலையீர்! வாயார நாம்பாடி [ள்
ஏர்உருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்!

(உரை) ஒவ்வொரு பொழுதிலும் "எம்பெருமானே" என்றென்று நம்பெருமானுடைய சீரைப் பாடுவதில் வாய் ஓயமாட்டாள். மிகுந்த மனக்களிப்புடன் தாரை தாரையாக ஓயாமல் (எம்பெருமானை நினைந்து) அழுவாள். தரையில் விழுந்து கும்பிடுவாள். வேறுதேவர்களை வணங்கமாட்டாள். பேரரசனிடம் (சிவபெருமானிடம்) பித்துக் கொண்டவர்கள் இப்படித்தான் ஆவார்களோ?

கச்சையும் பூணும் அணிந்த கொங்கை யுடையீரே! இவ்வாறு செய்து ஆட்கொள்ளும் வித்தகர் (ஞானஸ்வரூபி) யாவரோ அவர் திருவடிகளை வாயார நாம் பாடி அழகாய்த் தோன்றும் இம்மடுவில் பாய்ந்து விளையாடுவோம். 15

முன்னிக் கடலைச்சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மைஆள் உடையாள் இட்டிடை
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல் [யின்
பொன்னஞ் சிலப்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்அருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்! கசு

(உரை) ஏ! மேகமே! முனைந்து கடல்நீரைச் சுருக்கி முகந்துகொண்டு, மேலே(ஆகாயத்தில்) சென்று, எம்மை யுடையவளாகிய எம்பிராட்டியைப்போல் (நீல நிறத்தோடு) விளங்கி, எம்பிராட்டி இடுப்பில் அணிந்துள்ள ஒட்டியாணம் ஜ்வலிப்பதுபோல மின்னல்களால் பிரகாசித்து, எம்பிராட்டி திருவடிச் சிலம்போசைபோல் இடியிடித்து முழக்கி, (இறைவியின்) புருவம்போல (வளைந்த) வானவில்லை வளைத்து, தன்னையென்றும்

விட்டு நீங்காத இறைவனுடைய அன்பர்க்கு முனைந்து வந்து அவள் அருளைப் பொழிவதுபோல் (நீயும்) மழையைப் பொழிவாயாக. 16

செங்கணவன்பால் திசை முகன் பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்.

(உரை) வாசனை மிகுந்த கறுத்த கொண்டையை உடையவளே! திருமால் பிரமன் முதலிய தேவரிடத்தும் வேறெங்கும் இல்லாத ஒப்பற்ற இன்பம் நம்மிடத்தில் இருக்கும்படியாக நம்மைச் சீராட்டி நம்முடைய வீடுகள் தோறும் (இருதயங்கள் தோறும்) எழுந்தருளித் தனது செந்தாமரை போன்ற திருவடியைத் தந்து அருளுகின்ற சேவகனை, கிருபாநோக்கமுடைய அரசனை, அடிமைகளாகிய எங்கட்கு அருமையான அமுதை எங்கள் பெருமானைப் பாடி நலம் அதிகரிக்கும்படி இத்தாமரைக் குளத்தில் பாய்ந்து ஆடுவாயாக. 17

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப் [வாய்.
பெண்ணே! இப்பூம்புனல் பாய்ந்துஆடேலோர் எம்பா

(உரை) அண்ணாமலையானுடைய (சோதி மயமாகிய) திருவடிக் கமலத்தை வணங்கும் வானவர் கிரீடங்களி லுள்ள இரத்தினங்கள் எவ்வாறு (அச்சோதியின்முன்) பிரகாசியாமல் மழுங்கி யிருக்கின்றனவோ, அதைப் போலவே, சூரியனுடைய கிரணங்கள் இருளைப் போக்கிப் பிரகாசிக்க, நக்ஷத்திரங்கள் தங்கள் மின்னொளி மழுங்கி மறையும் (இவ்விடியற் காலத்திலே) ஏ! பெண்ணே! ஆண், பெண், அலி, ஒளிமிக்க வானம், மண் முதலியவைகளாகியும் அவற்றின் வேறாகியும் சிறந்த அமுதமாகியும் நிற்கும் எம்பெருமானுடைய திருவடியைப் பாடி இப்பூம்புனலில் பாய்ந்து ஆடுவோமாக. 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம்அச்சத்தால்
எங்கள் பெருமான்! உனக்கொன் றுரைப்போம்கேள்!
எங்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள்சேரற்க

எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசேஎமக் கெங்கோன் நல்குதியேல்
எங்கெழில் என் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய் !

(உரை) "உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்" என்ற பழமொழியைப் புதுப்பிக்க அஞ்சி, எங்கள் பெருமானே ! உனக்கு ஒரு விண்ணப்பம் செய்கிறோம் கேள்; எமது கொங்கைகள் உன்னுடைய அடியவரல்லாத மற்றவர்களை அடையக்கூடாது (அதாவது நாங்கள் சிவனடியாரைத் தவிர வேறெவரையும் திருமணஞ் செய்தல் கூடாது) என்பதும், எமது கைகள் உமது திருப்பணியைத் தவிர வேறெதையும் செய்தல் கூடாதென்பதும், இரவிலும் பகலிலும் எமது கண்கள் வேறெவற்றையும் காணுதல் கூடாதென்பதும் ஆகிய இவ்வரங்களை எங்கள் நாயகனே ! எங்களுக்கு நீ கொடுத்துவிட்டால், கிழக்கில் உதிக்கும் சூரியன் வேறு எந்தத் திசையில் உதித்தால் தான் எங்களுக்கென்ன பயம் ? 19

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்

போற்றிஎல்லா உயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம்உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய். உ0

(உரை) ஆதியாகின்ற உனது சீர்பாதத்தைப் போற்றுகின்றோம், அதை எங்கட்கு அருளுக. அந்தமாகின்ற உனது திருவடியைப் போற்றுகின்றோம், அதை எங்கட்கு அருளுக. எல்லா உயிர்கட்கும் தோற்றமும், போகமும், ஈறும் ஆகின்ற உனது திருவடிகளைப் போற்றுகின்றோம், அவற்றை எங்கட்கு அருளுக. திருமாலும் பிரமனும் காணாத திருவடியையும் உயிர்கள் உய்யும்படி ஆட்கொண்டருளும் திருவடியையும் நாங்கள் போற்றுகின்றோம், அவற்றை எங்கட்கு அருளுக. (சிறந்த ஒழுக்கமாகிய இம்) மார்கழி நீராடுதலைப் போற்றுகிறோம். 20

திருச்சிற்றம்பலம்

[குறிப்பு :—திருவண்ணாமலையில் மார்கழி மாதத்தில் விடியற்காலையில் பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பி நீராடச் சென்றதைக் கண்ட மாணிக்கவாசகர் அப்பெண்கள் பாடியதாகத் தாம் பாடுவது **திருவெம்பாவை.** நவ சக்திகள் தம்முள் தொழிற்படும் முறைமையைக் குறிப்பதாகக் கொள்வதும் மரபு.]

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருப்பள்ளியெழுச்சி

போற்றி! என்வாழ்முதல் ஆகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந்துறை உறைசிவ பெருமானே!
ஏற்றுயர் கொடிஉடையாய்! எனை உடையாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தரு ளாயே! க

(உரை) தாமரைப் பூக்கள் மலரும் குளிர்ந்த சேற்று வயல்கள் சூழ்ந்த திருப்பெருந்துறையிலுள்ள சிவபெருமானே! ரிஷபக் கொடியை உயர்வாக உடையவனே! என்னை உடையவனே! எம்பெருமானே! பொழுது விடிந்தது. உன்னுடைய மலர்போன்ற திருவடிகளை ஒரு படித்தான பூக்களால் பூசித்து வணங்குகிறோம்.

எங்களுக்குத் திருவருளைத் தரும் உனது திருமுகத்து அழகிய புன்முறுவலோடு படுக்கையிலிருந்து எழுந்தருள்வாயாக. 1

அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம் நின்மலர்த் திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங்கண்ணும்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவைஓர்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே !
அருள்நிதி தரவரும் ஆநந்த மலையே !
அலைகடலே ! பள்ளி எழுந்தருளாயே ! உ

(உரை) திருப்பெருந்துறையிலுள்ள சிவபெருமானே! திருவருளாகிய பொக்கிஷத்தைத் தரவருகின்ற ஆநந்த மலையே! அலைகள் நிரம்பிய கடலே! அருணோதயம் ஆயிற்று; இருள் போய்விட்டது; உனது அழகிய கண்ணைப்போல் (கருநிறமுள்ள) வண்டுகள் திரண்டு கூட்டமாக ரீங்காரம் செய்கின்றன. இவற்றையறிந்து உன்னுடைய முகமாகிய மலரிலே கருணையாகிய சூரியன் தோன்ற, உனது கண்கள் வாசனையுடைய மலர்கள் போல மலரப் பள்ளிவிட்டு எழுந்தருள்க! 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ! நல் செறிகழல் தாள்இணை காட்டாய் !
திருப்பெருந் துறைஉறை சிவபெருமானே !
யாவரும் அறிவரி யாய்! எமக் கெளியாய் !
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே ! ௩

(உரை) திருப்பெருந்துறையிலுள்ள சிவபெருமானே ! மற்றவர்கள் அறிவதற்கு அறியவனே ! எமக்கு எளியவனே! எம்பெருமானே! தேவனே! குயில்கள் பாடுகின்றன ; கோழிகள் கூவுகின்றன ; மற்றப் பறவைகள் சப்தம் செய்கின்றன ; சங்குகள் முழங்குகின்றன ; நக்ஷத்திரங்களின் பிரகாசம் மழுங்கி சூரிய உதயத்தின் ஒளியோடு கலக்கின்றது. கழல் அணிந்த வீரம் பொருந்திய உனது நல்ல திருவடிகளை விருப்பமுடன் எங்களுக்குக்காட்டுவாயாக ! பள்ளி எழுந்தருள்வாயாக. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்

சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறைஉறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்தருளாயே! ௪

(உரை) ஒரு பக்கத்தில் இனிய இசையோடு வீணையையும் யாழையும் வாசிக்கின்றார்கள்; மற்றொரு பக்கத்தில் இருக்கு முதலிய வேதங்களையும் தோத்திரங்களையும் சொல்லுகிறார்கள்; ஒரு பக்கம் அடர்ந்த பூமாலைகளை உனக்கு அணிவிக்கக் கையிலேந்தி நிற்கிறார்கள்; ஒரு பக்கம் தொழுது அழுது (அன்பின் மிகுதியால்) துவண்டு விழுவோர் நிற்கிறார்கள்; ஒரு பக்கம் தலைமேல் கைகுவித்து உன்னைக் கும்பிடுவோர் நிற்கிறார்கள். திருப்பெருந் துறையிலுள்ள சிவபெருமானே! (மேற்கூறிய செயல்களும் அன்பு முதிர்ச்சியு மில்லாத) என்னையும் ஆட்கொண்டு இனிய அருளைப் புரியும் எம்பெருமானே! பள்ளி எழுந்தருளாயே! 4

பூதங்கள் தோறும் நின்றாய் எனில் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்

சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக்கும் அரியாய்! எங்கள்முன் வந்து
ஏதங்கள் அறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே! ரு

(உரை) (நிலம், நீர், தீ, வளி, வான் என்னும் ஐந்து பெரும்) பூதங்கள் ஒவ்வொன்றிலும் நின்றாய் என்றும், (பிறப்பும் இறப்பும் ஆகிய) வரவும் போக்கும் இல்லாதவனென்றும், உன்னைப் புலவர்கள் கீதங்கள் பாடி ஆடுவதைத் தவிர, உன்னை நேரிற் கண்டவர்களைக் கேட்டும் அறியக் கூடவில்லை. சிந்தனைக்கு அரியவனே! குளிர்ச்சி பொருந்திய வயல் சூழ்ந்த திருப்பெருந்துறை மன்னவனே! (நீ மேற்கூறியபடி அரிய தன்மையனாயிருந்த போதிலும், எங்கள்மேல் வைத்த கருணையினால்) எங்கள் எதிரே வந்து எங்கள் குற்றங்களை அறுத்து எங்களை ஆட்கொண்டு அருள் புரியும் எம்பெருமானே! பள்ளி எழுந்தருள்வாய்! 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார்அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்கு கின்றார் அணங்கின் மணவாளா!

செப்புறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே !
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே! சு

(உரை) உமை மணவாளனே! செந்தாமரைகள் மலர்கின்ற குளிர்ந்த வயல் சூழ்ந்த திருப்பெருந்துறையிலுள்ள சிவபெருமானே! ஒப்பற்ற வீட்டு நிலையிலிருந்து உணரும் உனது அடியார்களும், (உன்னை யடைந்து) தங்கள் (பிறவிப்) பந்தனையை அறுத்தவர்களும், மை பூசிய கண்களையுடைய பெண்களும், மக்களியற்கையோடு உன்னை வணங்குகின்றார்கள். இப்பிறப்பை அறுத்து எம்மை ஆண்டு அருள் புரியும் எம்பெருமானே பள்ளியெழுந்தருளாயே ! 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந்தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தரகோச
மங்கை உள்ளாய்! திருப்பெருந் துறைமன்னா !
எது எமைப் பணிகொளும் ஆறதுகேட்போம்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! எ

(உரை) பழத்தில் சுவைபோலவும்அமிர்தம்போலவும், உள்ளதெனவும், அறிவதற்கு அரியதெனவும், எளியதெனவும், தேவர்களும் அறியமுடியாததெனவும், பல வகையாகக் கூறப்படுகின்ற கடவுளாகிய திருப்பெருந்துறை மன்னவனே! நீதான் அவன் என்னும்படியாக எங்கள் எதிரில் தோன்றி எங்களை ஆட்கொண்டு இங்கு எழுந்தருளினாய். தேன்மிகுந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த திருஉத்தர கோசமங்கையில் உள்ளவனே! எம்மைப் பணிகொள்ளும் வழியெது வென்று கேட்போம். எம் பெருமானே! பள்ளி எழுந்தருளாயே! 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்றறிவார்?
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே!
செந்தழல்புரை திருமேனியும் காட்டித்
திருப்பெருந்துறை உறைகோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்!
ஆரமுதே! பள்ளி எழுந்தருளாயே! அ

(உரை) பந்து விளையாடும் விரல்களையுடைய உமையம்மையும் நீயுமாக உனது அடியார்களுடைய பழைய குடிசைகள் தோறும் எழுந்தருளிய பரமனே! எல்லா

வற்றுக்கும் முதலும் நடுவும் முடிவும் ஆனவனே ! (பிர மன், விஷ்ணு, உருத்திரன் ஆகிய) மூவரும் உன்னை அறியார்- வேறு எவர்தான் அறியவல்லார் ? செந்தீ போன்ற உனது திருமேனியையும்,திருப்பெருந் துறை யில் உனது கோயிலையும், நீ (கருணை மிகுந்த) அந்த ணன் ஆவதையும் காட்டி எளிதில் வந்து என்னை ஆட் கொண்டாய், அரிய அமுதமே! பள்ளி எழுந்தருளாயே!

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே ! உன தொழுப்படியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே!
வண் திருப் பெருந்துறையாய் வழி அடியோம்
கண்ணகத்தே நின்று களிதரு தேனே !
கடலமுதே ! கரும்பே ! விரும்படியார்
எண்ணகத்தாய் ! உலகுக்கு உயிரானாய் !
எம்பெருமான் ! பள்ளி எழுந்தருளாயே ! ௯

(உரை) வானுலகத்திலுள்ள தேவர்களும் நெருங்கி அணுகவும் முடியாத பெரும் பொருளே ! உனக்குத் தொண்டு செய்யும் அடியவர்களாகிய எங்களை இம் மண்ணுலகத்தில் வந்து வாழச் செய்தவனே ! வளம் மிக்க திருப்பெருந்துறையானே ! உன் வழி நிற்கும் அடியோங்களுடைய உள்ளத்திலிருந்து இன்பம் அளிக்

தும் தேனே ! பாற்கடல் அமுதமே ! கரும்பே ! விரும்பும் அடியார்தம் எண்ணத்தில் உள்ளவனே ! உலகுக்கு உயிரானவனே ! எம்பெருமானே ! பள்ளியெழுந்தருளாயே ! 9

புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறை உறைவாய் ! திருமாலாம்
அவன் விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய் !
ஆரமுதே ! பள்ளி எழுந்தருளாயே ! ௧௦

(உரை) திருப்பெருந்துறை உறைவோனே ! ஆரமுதே ! " பூலோகத்திற் போய்ப் பிறவாமையினால் நாம் வாழ்நாளை வீணாகப் போக்குகின்றோம் ; இந்தப் பூமியைச் சிவன் உய்யக்கொள்கின்ற வழி இது " என்று கூறித் திருமால் (பூமியில் பிறக்க) விருப்பங்கொள்ளவும், பிரமனும் (அவ்வாறே) ஆசைப்படவும் நின்றனர். நீயும் உனது மலர்ந்த பேரருளும் பூமியில் தோன்றி எங்களை ஆட்கொள்ள வல்லவனே ! பள்ளி யெழுந்தருளாயே !

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

சமாஜ வெளியீடுகள்

		ரூ.	அ.
சம்பந்தர் தேவாரம் 2-ம் பதிப்பு	...	1	4
அப்பர் தேவாரம் ,,	...	1	0
சுந்தரர் தேவாரம் ,,	...	0	12
திருவாசகம் உரையுடன் ,,	...	0	10
பெரியபுராணம் ,,	...	1	6
திருமுருகாற்றுப்படை (உரையுடன்)	...	0	1
தலயாத்திரைப்படம் (விளக்கத்துடன்)	...	0	1
மெய்கண்டாரும் சிவஞானபோதமும்	...	0	8
சித்தாந்தம் (மலர் க - கக தனித்தனி)	...	2	0
திருப்புகழ்	...	3	0
சிவஞான பாடியம்	...	1	0

தபாற்கூலி, பார்சல்கூலி முதலியன வேறு.

திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி நூறு பிரதிகள் ரிஜிஸ்தர் தபாற்கூலியுள்பட ரூ. 2.

இவை கிடைக்கும் இடம் :—

சைவ சித்தாந்த மகா சமாஜம்

22-A கல்லுக்காரத் தெரு, மயிலாப்பூர், சென்னை.

SADHU PRESS, MADRAS.